**எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்**

**காட்டாங்குளத்தூர்**

தேதி : 10.07.2019

***பத்திரிக்கைச் செய்தி***

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூரில் அமைத்துள்ள எஸ்.ஆர்.எம் கல்வி நிறுவனம் மத்திய அரசு மனிதவள மேம்பாட்டு அமைச்சக வழிகாட்டுதலுக்கிணங்கவும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தின் ஒருங்கிணைப்பிலும் "உன்னத் பாரத அபியான் திட்ட" பணிகளை, பல்வேறு வகையில் கடந்த ஓராண்டு காலமாக மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக, எஸ்.ஆர்.எம் கல்வி நிறுவனம் கீழ்க்கண்ட கிராமங்களை தத்தெடுத்து அக்கிராம மக்களின் மேம்பாட்டுக்காக அறிவியல் ரீதியிலான திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

1. அஞ்சூர்
2. பட்டரவாக்கம்
3. தென்மேல்பக்கம்
4. ஒரத்தூர்
5. நாட்டரசன் பட்டு

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 10.07.2019 காலை 11.00 மணியளவில் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட அஞ்சூர் கிராமத்தில் மருத்துவ சுகாதார விழிப்புணர்வு மற்றும் அறிவியல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இணை இயக்குநர் (வளாகம்) மற்றும் UBA நோடல் அதிகாரி டாக்டர் வ.திருமுருகன் வரவேற்புரை ஆற்றினார். தனது உரையில் எஸ்.ஆர்.எம் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள் சமர்ப்பித்துள்ள அறிவியல் நுணுக்கம் கொண்ட திட்ட முன்மொழிவுகள் புதுடெல்லி மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் ஏற்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

டாக்டர் எம்.லோகராஜ் (சமூக மருந்தியல் துறை) உன்னத் பாரத அபியான் திட்ட நோக்கங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

டாக்டர் கே.விஜயகுமார், பிரிவு தலைவர்,(மின்சாரம் மற்றும் மின்னணுவியல் பிரிவு) அறிவியல் ஆய்வக மேம்பாட்டுக்கு ஆவண செய்தார்.

திரு.கர்த்தார் சிங், இயக்குநர் (அயல் நாட்டு தொடர்பு, எஸ்.ஆர்.எம் அறிவியல் தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் எஸ்.ஆர்.எம் மேலாண்மை பள்ளி ஆகியவைகளின் பொது சேவை குறித்து பெருமிதம் கொண்டார்.

டாக்டர்.சி.முத்தமிழ்செல்வன், இயக்குநர் (E&T), தனது தலைமை உரையில் பள்ளி தேவைகளை மேம்படுத்த எஸ்.ஆர்.எம் குழு ஆவண செய்யும் என குறிப்பிட்டார்.

பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு.ஏ.ஜெயபால் மற்றும் அஞ்சூர் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு.ஏ.பாஸ்கர், ஆகியோர் மருத்துவ முகாம் நடத்தியமைக்கும் அறிவியல் உபகரணங்கள் வழங்கியமைக்கும் நன்றி தெரிவித்தார்.

அஞ்சூர் பஞ்சாயத்து அலுவலர் திரு.பாரதி விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். அனைத்து விருந்தினர்களும் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் தற்சமயம் இந்நிறுவனத்துக்கு ஒரு வார கால முகாமில் வந்துள்ள இங்கிலாந்து நாட்டை சேர்ந்த Teesside பல்கலைக்கழக மாணவர்கள் குழுவினரும் கலந்து கொண்டனர். டாக்டர். சைமன் பின்ஞ், இம்மாதிரியான திட்டங்களுக்கு தங்கள் பல்கலைக்கழகம் மூலம் உதவி செய்வதாக தெரிவித்தார்.

நிகழ்வுக்கு முன்னர் அனைவரும் அறிவியல் ஆய்வகத்தை பார்வையிட்டனர், மாணவர்கள் உபகரணங்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கினர்.

**(டாக்டர்.வ.திருமுருகன்)**
**இணை இயக்குநர் (CL)**